# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 006/பேரூ/2023**

**நாள்: 17.02.2023**

திரு. R. அரிஷ்குமார்,
நீலகிரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அதிகரட்டி தேர்வுநிலை பேரூராட்சி. – எதிர்மனுதாரர்

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், காட்டேரி அணை அஞ்சல், தூரட்டி கிராமம், எண்.3/78A1ல் வசிக்கும் திரு. R. அரிஷ்குமார் என்பவரின் 27.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.01.2023–ல் பெறப்பட்டு 006/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், காட்டேரி அணை அஞ்சல், தூரட்டி கிராமம், எண்.3/78A1ல் வசிக்கும் திரு. R. அரிஷ்குமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 29.12.2022 நாளிட்ட தனது மனுவில் :

> "நீலகிரி மாவட்டம், அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட தூரட்டி கிராமத்தில் கடந்த 03.12.2022 அன்று அதிகரட்டி பேரூராட்சி அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்கள் கணேசன், மணிகண்டன் மற்றும் ஆனந்த் ஆகியோரால் தூரட்டி கிராமத்தின் சமுதாயக்கூடம் கிராம மக்களுக்கு எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பூட்டப்பட்டது. இதற்கான காரணம் அதே தூரட்டி கிராமத்தில் உள்ள E. மனோகரன் என்பவரின் தனி ஒருவரது மனுவினை ஏற்று அதிகரட்டி பேரூராட்சி அலுவலக பணியாளர்கள் கணேசன் மற்றும் மணிகண்டன், ஆனந்த் என்பவர்கள் இவரிடம் 10,000/- ரூபாய் பெற்று கொண்டு தூரட்டி கிராமத்தை சேர்ந்த 200 குடும்பங்களின் பராமரிப்புக்கு உட்பட்ட சமுதாயகூடம் பூட்டபெற்றது. குறிப்பாக அலுவலக பணியாளர்களாகிய இருவர் கணேசன் மற்றும் மணிகண்டன் தனிநபர் மனுதாரர் மனோகரனின் சொந்தக்காரர்கள் ஆவர்.
>
> குறிப்பு: ஐயா தூரட்டி கிராமத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேலும் 200 குடும்பங்களும் சுக மற்றும் துக்க நிகழ்வுகள் அனைத்தும் பூட்டப்பட்ட சமுதாயகூடத்தை சார்ந்தே நடைபெறுகிறது.

சமுதாயக்கூடம் பூட்டப்பட்டதற்கான எவ்வித அதிகாரப்பூர்வ ஆணையும் இதுவரை மக்களிடத்தில் காட்டப்படவில்லை.

மேலும் தூரட்டி கிராமத்தின் சமுதாயகூடம், பேரூராட்சியின் ஒப்பந்தம் அடிப்படையில் கிராம மக்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டம் அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட தூரட்டி கிராமத்தின் சமுதாயகூடத்தின் ஒப்பந்தம் பெற்று நாள்:19.01.2022 முதல் 18.01.2025 வரையிலான ஒப்பந்த சான்று சீட்டின் நகல்கள் மற்றும் முதலாம் ஆண்டிற்கான கட்டணம் செலுத்தியதற்கான சான்றினையும் இந்த மனுவில் இணைத்துள்ளேன். சான்று சீட்டில் தூரட்டி கிராம தலைவர் H.மூர்த்தி அவர்களின் பெயர் இடம் பெற்றிருக்கிறது.

03.12.2022 அன்று சமுதாயக்கூடத்தில் நடக்கவிருந்த புதுமனைப் புகு விழாவிற்கு முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டிருந்த ஊர் மக்களில் ஒருவரான திரு. திருமுருகன் என்பவர் சமுதாயகூடம் பூட்டப்பட்ட தகவல் அறிந்து பெரும் இன்னல்களுக்கு ஆளானார். இவர் முன்கூட்டியே ஊர்மக்களிடம் பதிவு பெறப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தூரட்டி கிராம மக்கள் கிராமத்தின் சமுதாயகூடத்தினை 'நமக்கு நாமே' என்ற திட்டத்தின் வாயிலாக கிராம மக்களின் தனி திறமை ஆதரவாளர்களைக் கொண்டு ரூ.10,00,000/- செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இதுபோன்ற அலுவலக நடவடிக்கைகள் கிராம மக்கள் மத்தியில் பெறும் துயர சம்பவமாக உள்ளது.

மேலும் தூரட்டி கிராம மக்கள் ஒன்றிணைந்து மாவட்ட ஆட்சியர் அவர்களை அணுகினர். அதன் விளைவாக 05.12.2022 அன்று வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் அணி, பூட்டப்பட்ட சமுதாய கூடத்தை திறந்து வைத்தனர். பிறகு அதிகரட்டி பேரூராட்சி அலுவலர் திறவுகோலினை பேரூராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என கூறினார். கிராம மக்களும் ஒப்படைத்து ஒத்துழைத்தனர். பிறகு ஒப்படைக்கப்பட்ட திறவுகோல் இதுவரை கிராம மக்களிடம் திரும்பிப் தரப்படவில்லை. கிராம மக்கள் RDOவிடம் மேல்முறையீடு செய்தனர். RDO, திறவுகோலினை மக்களிடத்தில் கொடுக்கக் கூறியும் பேரூராட்சி அலுவலர் தரமறுக்கிறார்.

சமுதாயக்கூடத்தில் சுகநிகழ்வுகளில் கட்டணங்களை பேரூராட்சி அலுவலகத்தில் சென்று செலுத்தி மக்கள் திறவுகோலினை பெறும் வகையில் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். தூரட்டி கிராம மக்களின் நலனை மனதில் கொண்டு திறவுகோலினை கிராம மக்களிடம் பெற்றுத்தருமாறு, கிராம மக்கள் அனைவரும் வேண்டுகிறோம்.

மேலும் கிராம மக்களாகிய 200 குடும்பங்களை ஒன்றிணைத்து இந்த மனுவானது எழுதப்பெற்றுள்ளது. மேலும் தீர்வு கிடைக்காதவண்ணம் எங்களின் குடும்ப அட்டையினை RDOவிடம் சமர்ப்பிக்கவும் தயாராகிவிட்டோம் என்று கிராம மக்கள் முன்னிலையில் முடிவெடுக்கப்பட்டது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் மூலம் தீர்வு கிடைக்கும் என எண்ணி இந்த மனுவானது உங்களிடம் சமர்ப்பித்துள்ளோம். தயவு கூர்ந்து சிறந்த தீர்வினை பெற்று தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஐயா, நீலகிரி மாவட்டம் அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட தூரட்டி கிராமத்தின் நலன் காக்கும் வகையில் எங்கள் கிராமத்தின் சமுதாயக்கூடத்தின் திறவுகோலினை எங்களிடம் தருமாறும் மற்றும் இதுபோன்ற நடவடிக்கைகள் மேலும்

நடைபெறாத வண்ணம் எங்கள் தூரட்டி கிராம மக்களுக்கு ஒரு நல்ல தீர்வினை பெற்றுதருமாறு தாழ்மையுடன் கிராம மக்கள் சார்பில் கேட்டுகொள்கிறேன். மேலும் சமுதாய கூடத்தின் திறவுகோலினை திரும்ப ஊர் மக்களுக்கு பெற்று தர வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுகொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

(6) அதிகரட்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவரின் 03.02.2023 நாளிட்ட தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட தூரட்டி கிராமத்தில் இப்பேரூராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடம், நடப்பாண்டில் தூரட்டி கிராம ஊர் தலைவர் திரு. மூர்த்தி என்பவருக்கு ஆண்டிற்கு ரூ.6000/- (ரூபாய் ஆராயிரம் மட்டும்)ற்கு குத்தகைக்கு விடப்பட்டு மேற்படி கிராமத்தில் நடைபெறும் பொது நிகழ்வுகள் மற்றும் ஊரிலுள்ள தனியர்களின் திருமணம் மற்றும் இதர காரியங்களுக்காக குறைந்த கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது.

தூரட்டி கிராமத்தில் வசிக்கும் பொது மக்களிடையே பிரச்சனை ஏற்பட்டு இரு பிரிவினர்களாக பிரிந்து A. பிரிவினர் திரு. மூர்த்தி என்பவர் தலைமையிலும் B. பிரிவினர் திரு. மனோகரன் என்பவர் தலைமையிலும் செயல்பட்டு வந்தனர். திருமணம் மற்றும் இதர காரியங்களுக்காக A. பிரிவினரின் கைவசமுள்ள சமுதாய கூடத்தில் திருமணம் மற்றும் இதர காரணங்களுக்காக முன்பதிவு செய்து முன்னுரிமை அடிப்படையில் சமுதாய கூடம் குத்தகைக்கு விடப்பட்டது.

திரு. மனோகரன் என்பவர் (B பிரிவு) தனது மகனின் திருமணம் டிசம்பர் மாதம் 4 மற்றும் 5ஆம் தேதிகளில் நடைபெற இருப்பதால் A பிரிவினரிடமிருந்து சமுதாய கூடத்தினை இரு நாட்களுக்கு பெற்று தருமாறும் அதற்கான தொகையினை பேரூராட்சிக்கு செலுத்துகிறேன் எனவும் 17.10.2022ல் மனு அளித்துள்ளார்.

ஆனால் இப்பேரூராட்சியில் ஏற்கனவே குத்தகை விடப்பட்டதால் சம்மந்தப்பட்ட A பிரிவினரை அணுகுமாறு தெரிவிக்கப்பட்டது. ஆனால் B பிரிவினரை சார்ந்த மனோகரன் என்பவர் A பிரிவினரிடம் பேச்சுவார்த்தை இல்லாததால் பேரூராட்சி மூலம் பெற்று தருமாறு தெரிவித்திருந்தார்.

இப்பேரூராட்சியால் A பிரிவினை சார்ந்த திரு. மூர்த்தி என்பவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மேற்படி 4 மற்றும் 5ஆம் நாட்களில் சமுதாயக்கூடத்தில் நிகழ்ச்சிகள் ஏதும் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று கேட்கப்பட்டதில், முன்பதிவு ஏதும் செய்யப்படவில்லை எனவும், B பிரிவினை சார்ந்த மனோகரன் என்பவருக்கு ஒதுக்குகிறேன் என தெரிவித்திருந்தார்.

சில நாட்களுக்கு பிறகு A பிரிவினை சார்ந்த திரு. மூர்த்தி என்பவர் வேண்டுமென்றே B பிரிவினரை சார்ந்தவருக்கு சமுதாய கூடத்தினை வழங்க கூடாது என்ற காழ்ப்புணர்ச்சி காரணமாக மற்றொருவரின் புதுமனை புதுவிழா நிகழ்ச்சிக்கு 3,4 மற்றும் 5-ஆம் தேதிகளில் A பிரிவினை சார்ந்த திரு. திருமுருகன் என்பவருக்கு சமுதாய கூடத்தினை ஒதுக்கியுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 2 மற்றும் 3ஆம் தேதிகளில் இருபிரிவினரிடையே ஓய்வு பெற்ற செயல் அலுவலர் திரு. ஜோ. ஜெகநாதன் தலைமையில் பேச்சு வார்த்தை நடத்தி A பிரிவினருக்கு 3 மற்றும் 4ஆம் புதுமனை புகுவிழாவினை நடத்திடவும், 4-ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு மேல் 5-ஆம் தேதி திரு. மனோகரன் என்பவர் மகனின் திருமண நிகழ்ச்சியை நடத்த சமுதாய கூடத்தினை ஒதுக்குமாறும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இந்நிகழ்வு 3ஆம் தேதி இரவு 9.00 மணிவரை நடைப்பெற்ற பேச்சு வார்த்தையில் எந்தவித

முன்னேற்றமும் ஏற்படாததால் A பிரிவினர் B பிரிவினருக்கு சமுதாய கூடத்தினை வழங்க கூடாது என்ற எண்ணத்தில் சமுதாய கூடத்தினை தர இயலாது என தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து இரு பிரிவினரிடையே பிரச்சனை ஏற்படா வண்ணம் உயர் அதிகாரிகளிடம் ஆலோசனை பெற்று காவல் துறையினர் உதவியுடன் சம்மந்தப்பட்ட சமுதாய கூடத்தினை பேரூராட்சியால் Lock and Seal செய்யப்பட்டது.

அதன் பிறகு A பிரிவினர் 5ஆம் தேதி மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் முகாமில் சம்மந்தப்பட்ட சமுதாய கூடத்தினை தங்களிடமே ஒப்படைக்குமாறும் lock and Sealனை அகற்றி தருமாறும் மனு அளித்தனர்.

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேற்படி பொருள் சம்மந்தமாக டிசம்பர் மாதம் 5ஆம் நாள் மாலையிலேயே இருபிரிவினரை அழைத்து அமைதி பேச்சு வார்த்தை நடத்துமாறு குன்னூர் கோட்டாட்சியர் அவர்களுக்கு உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் கோட்டாட்சியர் அமைதி பேச்சுவார்த்தை நடத்தியத்தில் இரு பிரிவினரிடையே சமரசம் ஏற்படும் வரை மேற்படி சமுதாய கூடத்தினை பேரூராட்சியின் கட்டுப்பாட்டில் பராமரிப்பு பணி மற்றும் குத்தகை விட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் இரண்டாவது முறையாக வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை நடைப்பெற்ற போதும் இரு பிரிவினரிடையே சமரசம் ஏற்படாததால் மீண்டும் பேரூராட்சியின் பொறுப்பில் சமுதாய கூடத்தினை எடுக்க தெரிவிக்கப்பட்டது. சம்மந்தப்பட்ட மனுதாரர் வேண்டுமென்றே பேருராட்சி செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீது தவறான புகார் அளித்துள்ளார்.

மேலும் வருவாய் கோட்டாட்சியர் குன்னூர் அவர்களின் ஆணைக்கிணங்க பேரூராட்சி கட்டுப்பாட்டில் சமுதாய கூடம் எடுக்கப்பட்டு, விதிகளின்படி இரண்டு மாதங்களுக்கு உள்ளூர் விசேஷங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு ரூ.18000/- வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இருபிரிவினரிடையே சமரசம் ஏற்படும் பட்சத்தில் சமுதாயக் கூடம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 30.01.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.01.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. மனுதாரர் 30.01.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்காணும் விளக்கங்களை அளித்துள்ளார்:-

நீலகிரி மாவட்டம் குன்னூர் அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட துரட்டி கிராமத்தில் உள்ள சமுதாய கூடம் கிராம மக்களுக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி பூட்டப்பட்டது. அங்கு வசிக்கும் 200க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். ஒருசிலரின் தூண்டுதலால் மேற்கண்ட சமுதாயக் கூடம் பூட்டப்பட்டதால், அங்குள்ள மக்கள் தங்களின் நல்ல காரியங்களுக்கு அச்சமுதாயக் கூடத்தை பயன்படுத்த இயலவில்லை. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் மேல் நடவடிக்கையாக RDO அறிவுறுத்தலின்பேரில் வட்டாட்சியரால் Peace Committee அமைக்கப்பட்டு, மேற்கண்ட சமுதாயக் கூடம் சில நாட்களுக்கு திறக்கப்பட்டு பின்னர் மீண்டும் மூடப்பட்டது.

எனவே மேற்கண்ட சமுதாயக் கூடம் அங்குள்ள பொது மக்கள் பயன்பெறும் வகையில் மீண்டும் அதனை திறந்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 29.12.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

4.அதிகரட்டி தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் பேரூராட்சியின் மன்றக் கூட்டம் நடைபெறுவதை முன்னிட்டு 30.01.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

5. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் அதிகரட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

நீலகிரி மாவட்டம், குன்னூர் அதிகரட்டி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட தூரட்டி கிராமத்தில் உள்ள சமுதாய கூடம் முன்னறிவிப்பின்றி பூட்டப்பட்டதால் அங்குள்ள மக்கள் தங்களின் நல்ல காரியங்களுக்கு அச்சமுதாயக் கூடத்தை பயன்படுத்த இயலவில்லை. எனவே சமுதாயகூடம் அங்குள்ள பொது மக்கள் பயன்பெறும் வகையில் மீண்டும் அதனை திறந்திட செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

அதிகரட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி சமுதாய கூடத்தினை பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்து மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறை தீர்க்கும் நாள் முகாமில் “Lock and Seal” அகற்றித் தருமாறு ஒரு பிரிவினர் கோரி மனு அளித்ததன் அடிப்படையில் டிசம்பர் 5, 2022–ஆம் நாள் இரு பிரிவினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்துமாறு குன்னூர் கோட்டாட்சியருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். எனினும் பேச்சுவார்த்தையில் சமரசம் ஏற்படவில்லை. மீண்டும் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சமரசம் ஏற்படவில்லை என தெரிவித்து இரு பிரிவினரிடையே சமரசம் ஏற்படும் பட்சத்தில் சமுதாய கூடம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வு குறித்து வருவாய் கோட்டாட்சியரிடம் விவரங்கள் தொலைபேசியில் கேட்டறிந்த போது மேற்கண்ட சமுதாயக் கூடம் திறப்பதில் இரு தரப்பினரிடையே கருத்து வேறுபாடு உள்ளதால் மேற்கண்ட சமுதாயக் கூடம் திறக்கும்பட்சத்தில் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புகள் உள்ளதால் இரு தரப்பினரையும் மீண்டும் அழைத்து பேசி அவர்களிடம் சமரச முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் அனைவரையும் (Peace Committee) அழைத்து பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சனைகளை சரிசெய்து, சமுதாயக் கூடத்தை விரைவில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்த முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. சி. அரிஷ்குமார்,
   3/78A1, தூரட்டி கிராமம்,
   காட்டேரி அணை அஞ்சல்,
   குன்னூர் வட்டம், நீலகிரி மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   அதிகரட்டி தேர்வுநிலை பேரூராட்சி ,
   நீலகிரி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.
4. இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
   சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.